

திருப்பூர் மாவட்டம், வெள்ளக்கோவில் ஒன்றியம், வேலப்பநாயக்கன் வலசு ஊராட்சி, மூத்த நாயக்கன்வலசில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் மூத்தநாயக்கன்வலசு பகுதியில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து 7.5 ஹெச்.பி மின்மோட்டார் பொருத்தப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு குடிநீரை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். இதில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி, திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், மாவட்ட துணை செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், ஒன்றியச் செயலாளர் கே.சந்திரசேகரன், நகர செயலாளர் சபரி எஸ்.முருகானந்தம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெற்ற, புதுக்கோட்டை மாவட்டம்,ஆலங்குடி சட்டமன்ற தொகுதி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம்,ஆவணாத்தாங்கோட்டை ஊராட்சி கடைவீதி பகுதியில் அறந்தாங்கி மேற்கு ஒன்றிய கழக தி.மு.க. சார்பில், கோடை காலத்தில் மக்களின் தாகத்தினை தீர்க்கும் வகையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள "கோடைகால தண்ணீர் பந்தலை" பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்து பொதுமக்களுக்கு மோர், சர்பத், தர்பூசணி, இளநீர் வழங்கினார். இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர் குமார் (எ) துரைக்கண்ணு, முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், மாவட்ட, ஒன்றிய, ஊராட்சி கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## உளுந்தூர்பேட்டை தொகுதியில்

# மக்கள் ஏற்றம் பெற பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிய முதல்வருக்கு நன்றி!

## சட்டப்பேரவையில் – உளுந்தூர்பேட்டை ஏ.ஜெ.மணிக்கண்ணன் பேச்சு!



**சென்னை, ஏப். 26 - சட்டப்பேரவையில் மின் துறை மானியக் கோரிக்கையில் உளுந்தூர்பேட்டை தொகுதி உறுப்பினர் ஏ.ஜெ. மணிக்கண்ணன் பேசுகையில், உளுந் தூர்பேட்டை தொகுதி மக்கள் ஏற்றம் பெற பல்வேறு திட்டங்களை நிறை வேற்றிய முதல்வருக்கு நன்றி என்று தெரிவித்தார்.**

பேரவையில் ஏ.ஜெ. மணிக்கண்ணன் பேசியதாவது:-

பார்போற்றும் பல்வேறு திட்டங்களை உருவாக்கி, அதற்கு உயிரூட்டி தமிழ் நாட்டின் வளர்ச்சியை உலகளாவிய வளர்ச்சிக்கு வித்திட்டு தமிழர்கள் மனதில் நீக்கமற நிலைத்து நிற்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு வித்திட்ட இந்த மூவரின் ஓர் உருவமாய் இருந்து தமிழ்நாடு மட்டுமின்றி உலகளாவிய அளவில் தமிழையும் தமிழனையும் தலைநிமிரச் செய்து, இருள் நீக்கி இந்திய ஒன்றியத்திற்கு வழிகாட்டும் முன்னோடி மாநிலமாக தமிழ்நாட்டை வழிநடத்தி நல்லாட்சி செய்துவரும் முதலமைச்சர் தளபதியார் அவர்களை வணங்குகிறேன். ஐந்தாம் தலைமுறையை வழிநடத்தும் எங்களின் வருங்காலம் தமிழ்நாட்டின் இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம், எங்கள் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பல்வேறு திட்டங்களையெல்லாம் ஆய்வு செய்து, விரைந்து பணிகளை செய்து தந்திருக்கின்றதுணை முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். அவை முன்னவர் மற்றும் நீர்வளத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

எங்கள் கள்ளக்குறிச்சி மாவட்டப் பொறுப்பு அமைச்சரும் பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். மற்றும் அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். உளுந்தூர்பேட்டை தொகுதியில் என்னை மாபெரும் வெற்றி பெறச் செய்த தொகுதி பொதுமக்களுக்கும், கழக நிருவாகிகளுக்கும், கூட்டணி கட்சி நிருவாகிகளுக்கும் மற்றும் கழகத் தோழர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம் மின்சாரத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் எனக்கு பேச வாய்ப்பு வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அரசுத் தலைமைக் கொறடா அவர்களுக்கும் எனது நன்றியையும் வணக்கத்தையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில்தான் விவசாயிகளுக்கு கட்டணமில்லா மின்னிணைப்பு வழங்கப்பட்டது. மேலும், முதல்வர் தளபதியார் அவர்கள் ஆட்சிப் பொறுப் பேற்ற பிறகு, ஒரு இலட்சத்து 70 ஆயிரம் விவசாயிகளுக்குமேல் கட்டணமில்லா மின்னி ணைப்பு வழங்கியமைக்கும் முதல்வருக்கு அனைத்து விவசாயிகளும் மகிழ்ச்சியோடு நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர். இதேபோல், கிராமப்புறங்கள் மற்றும் நகரப் பகுதிகளில் சீரான மின்சாரம் கிடைக்கும் வகையில் திறன் மின்மாற்றிகள் பெருமளவில் அமைக்கப்பட்டுள்ளன. இந்தத் திறன் மின்மாற்றிகள் அதிக அளவில் அமைக்கப்பட்டுள்ள நிலையில், இதற்கு ஏற்றவகையில் புதிய துணை மின்நிலையங்கள் அமைக்க வேண்டும். இதன் ஒரு பகுதியாக எனது உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட பின்னல்வாடி கிராமத்தில் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் துணை மின்நிலையம் அமைக்க உத்தரவிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர்மூலம் மின்சார வாரியத்திற்கு நிலம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. அந்தப் பணிகளை விரைந்து துவங்க வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன்.

முதல்வர் தளபதியார் அவர்கள் ஆட்சிப் பொறுப் பேற்றபின், உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட உளுந்தூர்பேட்டை, திருநாவலூர், ஆசனூர் ஆகிய 3 துணை மின் நிலையங்களிலும் கூடுதல் *power transformers* பொருத்தப்பட்டுள்ளன. இதனால், இந்தப் பகுதியில் தற்போது தங்கு தடையின்றி மின்சாரம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதற்கு முதல்வர் அவர்களுக்கும், மின் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, எ.குமாரமங்கலம் மற்றும் செங்குறிச்சி அருகிலுள்ள சேந்தமங்கலம் ஆகிய இரண்டு இடங்களிலும் புதிய துணை மின் நிலையம் அமைக்க உரிய இடம் தேர்வு செய்யப்பட்டு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. இந்தப் பணிகளை விரைந்து துவங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**மின் சாதனப் பொருட்கள் சேதம்!**

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியத்தில் 13 கிராமங்களில் ஃபெஞ்சல் புயல், மழை காரணமாக மின் கம்பங்கள், மின்மாற்றிகள், மின் சாதனப் பொருட்கள் பெருமளவில் சேதமடைந்தன. அவை போர்க்கால அடிப்படையில் இரண்டு நாட்களுக்குள் சீரமை க்கப்பட்டு, உடனடியாக மின்சார விநியோகம் வழங்கப்பட்டது. இதற்கு முதல்வர் அவர்களுக்கும், மாவட்ட பொறுப்பு அமைச்சர் அவர்களுக்கும், மின் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, அதிக மக்கள் தொகை கொண்ட தொகுதியாகும். கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அதிக வாக்காளர்கள் உள்ள தொகுதியாகும். விவசாயிகள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் கொண்ட தொகுதியாகும். அதேபோன்று, அதிக கிராமங்களைக் கொண்ட தொகுதியாகும். உளுந்தூர்பேட்டை தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டும் என்பது பொது மக்களின் பல ஆண்டு கோரிக்கையாக உள்ளது. இதனை ஏற்று, உளுந்தூர்பேட்டை தொகுதியில், முதல்வர் சிறப்புச் செயலாக்கத் திட்டத்தின்கீழ் முதல் கோரிக்கையாக உளுந்தூர்பேட்டையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க பரிந்துரை செய்துள்ளேன். எனவே, முதலமைச்சர் அவர்களும், துணை முதலமைச்சர் அவர்களும், உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**ரூ.1.87 கோடி செலவில் அறிவுசார் நூலகம்!**

உளுந்தூர்பேட்டை பேரூராட்சியை நகராட்சியாகத் தரமுயர்த்தி, அதற்கான அலுவலகக் கட்டடம் கட்டி பல்வேறு வசதிகளை ஏற்படுத்தித் தந்தமைக்கும், உளுந்தூர்பேட்டை நகராட்சியில் 1.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அறிவுசார் நூலகம் கட்டித் தந்தமைக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட பொறுப்பு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினையும் வணக்கத்தையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை நகராட்சி பொதுமக்களின் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்கக்கூடிய வகையில், 60 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்த நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட திருநாவலூர் கிராமத்தில் புதிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும், உளுந்தூர்பேட்டையிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கூடுதல் கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கியும் தந்த வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருக்கோவிலூரிலிருந்து உளுந்தூர்பேட்டை தொகுதி, ஆசனூர் வரையிலான சாலையை விரி வாக்கம் செய்து, நான்குவழிச் சாலையாக மாற்றி பணிகள் மேற்கொள்ள உத்தரவிட்ட முதல்வர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அவர்களுக்கும் என்னுடைய மனப்பூர்வமான நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கெடிலம் ஆற்றின் குறுக்கே மேம்பாலம்!**

ஒடையானந்தல் சாலையில் கெடிலம் ஆற்றின் குறுக்கே 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்பாலம் அமைக்கும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்கு உத்தரவிட்ட முதலமைச்சர் அவர்களுக்கும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனைக்கு 100 படுக்கை வசதிகளுடன் கூடிய 23.75 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான புதிய கட்டடம் கட்டிக் கொடுத்த முதல்வர் அவர்களுக்கும், துணை முதல்வர் அவர்களுக்கும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியத்திற்குட்பட்ட ஆமூரான் வாய்க்காலில் 70 ஆண்டுக்காலமாக தண்ணீர் செல்லாமல் இருந்த நிலையில், 4.50 கோடி ரூபாய் மதிப்பீட்டிற்கான நிதி ஒதுக்கீடு செய்து, திட்டத்தினைச் செயல்படுத்தி கால்வாய் சீரமைத்துக் கொடுத்து, விவசாயிகளின் நலன் காத்த முதல்வர் அவர்களுக்கும், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனப்பூர்வமான நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கரும்பு விவசாயிகளின் வேதனையை போக்கிய முதல்வர்!**

உளுந்தூர்பேட்டை தொகுதியிலுள்ள பெரிய செவலை செங்கல்ராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை நீண்டகாலமாக சரவர இயங்காமல் இருந்தது. நமது கழகம் ஆட்சிப் பொறுப் பேற்ற பிறகு, தொடர்ந்து ஒவ்வோராண்டும் உரிய நிதியினை ஒதுக்கீடு செய்து, இயந்திரங்கள் பழுதுநீக்கம் செய்யப்பட்டன. மேலும், கரும்பு விவசாயிகளுக்கு பல ஆண்டுகளாக வழங்கப்படாமல் இருந்த 24 கோடி ரூபாய் நிலுவைத் தொகையை விவசாயிகளுக்கு வழங்கி, கரும்பு விவசாயிகளின் வேதனையைப் போக்கிய தமிழக முதல்வர் அவர்களுக்கும், அந்தத் துறையின் அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளகிறேன்.

உங்கள் தொகுதியில் முதல்வர் சிறப்புத் திட்ட செயலாக்க துறையின் சார்பாக புத்தனந்தல் அணைக்கட்டு சீரமைத்து 6 ஏரிகளுக்கு தண்ணீர் செல்லும் வாய்க்கால்களை தூர்வாரிக் கொடுத்து விவசாயிகளின் பல ஆண்டுகால கோரிக்கையை நிறை வேற்றிக் கொடுத்தமைக்கு விவசாயிகளின் சார்பாக நன்றியினை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதியில் 20,000க்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ரூ.2,350 கோடி மதிப்பீட்டில் தோல் இல்லா காலணி தொழிற்சாலை அமைக்க உத்தரவிட்டு பணிகள் விரைந்து நடைபெற்று வருகிறது. இதற்கு முதல்வர் அவர்களுக்கும், தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான பிர சித்திப்பெற்ற பரிக்கல் ஸ்ரீலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில், திருநாவ லூர் ஸ்ரீ பக்தஜனேஸ்வரர் திருக்கோயில், உளுந்தூர்பேட்டை ஸ்ரீகைலாசநாதர் திருக்கோயில் ஆகிய கோயில்களில் குடமுழுக்கு நடத்துவதற்குபுனரமைப்பு பணி செய்திட நிதி ஒதுக்கீடு செய்து குடமுழுக்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதற்கு முதல்வர் அவர்களுக்கும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உளுந்தூர்பேட்டை நகர பகுதியில் சுமார் 50 ஆண்டு காலமாக சர்கார் ஜாகா இடத்தில் குடியிருந்து வருபவர்களுக்கு பட்டா வழங்க உத்தரவிட்ட முதல்வர் அவர்களுக்கும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும், என் மனப்பூர்வமான நன்றியினை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூர் அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் களமருதூர் அரசு மேல்நிலைப் பள்ளி ஆகிய இரண்டு பள்ளிகளில் இருந்தும் தனியாக பிரித்து அந்தந்த பள்ளிகளில் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைக்க வேண்டும். இதற்கு பொதுமக்களின் பங்குத் தொகையும் செலுத்தப்பட்டு முன்மொழிவு வரப்பெற்றுள்ளன. மேலும், உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்திலும் பரிந்துரை செய்யப்பட்டு உள்ளது. எனவே, மேற்படி பள்ளிகளில் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை பிரித்து வழங்குமாறு முதலமைச்சர் அவர்களையும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். உளுந்தூர்பேட்டை நகர பிரிவிலிருந்து விருத்தாசலம் ரோடு புறவழிச்சாலை அமைப்பதற்கு திருவெ ண்ணெய்நல்லூர் சாலை இணைப்பு அளவீடு செய்யும் பணிகள் முடிவ டைந்துள்ளது. (மணியடிக்கப் பெற்றது) அடுத்தகட்ட பணிகளை விரைந்து முடிக்க வேண்டி கேட்டுக்கொள்கிறேன். உளுந்தூர்பேட்டை நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அறிவிக்கப்பட்டு, அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, நகராட்சித் துறைக்கும், நிலம் கையகப் படுத்தும் துறைக்கும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அனுமதிகோரி முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளது. இதற்கு உரிய அனுமதி வழங்கி புதிய பேருந்து நிலைய கட்டுமான பணிகளை விரைந்து துவங்குமாறு நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதியில் உள்ள உளுந்தூர்பேட்டை தாலுக்கா கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் பெரிய தாலுகாவாக உள்ளது. இந்நிலையில் திருக்கோயிலூர் கோட்டாட்சியர் அலுவலகத்தில் உளுந்தூர்பேட்டை தொகுதியைச் சேர்ந்த கிரா மங்களே அதிக அளவில் உள்ளதால், உளுந்தூர்பேட்டையை தலைமையிடமாகக் கொண்டு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் அமைக்க வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**இணைப்பு கால்வாய் அமைத்திடுக!**

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருக்கோயிலூர் அணைக்கட்டிலிருந்து கெடிலம் ஆற்றை இணைக்க இணைப்புக் கால்வாய் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இதனால் இந்த பகுதியைச் சேர்ந்த விவசாயிகளின் பாசனத் தேவையும், பொதுமக்களின் குடிநீர்த் தேவையும் பூர்த்தியாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கெடிலம் ஆற்றின் குறுக்கே பிள்ளை யார்குப்பம் மற்றும் கிழக்குமருதூர் ஆகிய இரண்டு இடங்களிலும் தடுப்பணை அமைத்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

உளுந்தூர்பேட்டை தொகுதி காட்டுஎடையார் முதல் திம்மச்சூர் சாலை கிராமத்திற்கு இடையே கெடிலம் ஆற்றின் குறுக்கே புதிய மேம்பாலம் அமைத்துத் தர வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை ஒன்றியம் பிடாகம் பஞ்சாயத்து மற்றும் எறையூர் பஞ்சாயத்து ஆகிய இரண்டும் அதிக மக்கள்தொகை கொண்ட பஞ்சாயத்துகளாகும். அதேபோன்று திருநாவலூர் ஒன்றியம், திருநாவலூர் கிராம பஞ்சாயத்தும் அதிக மக்கள்தொகை கொண்ட பகுதியாகும். மேற்படி ஊராட்சிகளை பேரூராட்சியாகத் தரமுயர்த்தித் தர வேண்டுமாய் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை கிளை சிறைச்சாலை கட்டடங்கள் முழுமையாக மிகவும் பழுதுப்பட்ட நிலையில் உள்ளதால் பாலி தமிழ்நாடு சிறப்பு காவல் படை அருகில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் உள்ளது. அந்த இடத்தில் புதிய கிளைசிறைச்சாலை அமைக்க வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை வட்டம், களமருதூர் பகுதியில் செயல்பட்டுவரும் புறக்காவல் நிலையத்தை நிரந்தர காவல் நிலையமாக மாற்றித் தருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**தீயணைப்பு நிலையத்திற்கு புதிய கட்டிடம்!**

உளுந்தூர்பேட்டை நகராட்சியில் உள்ள காவல் நிலையத்திற்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் இடம் தேர்வு செய்யப்பட்டு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி காவல் நிலையத்திற்கு புதியதாக கட்டிடம் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். திருநாவலூர் பகுதியில் இயங்கிவரும் தீயணைப்பு நிலையத்திற்கும் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை நீதிமன்ற வழக்கறிஞர்களின் பல ஆண்டுகால கோரிக்கையினை ஏற்று உளுந்தூர்பேட்டை நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் அமைக்க வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டை நகராட்சிப் பகுதியில் நவீன வசதிகளுடன்கூடிய (மணியடிக்கப்பெற்றது) மீன் மார்க்கெட் மற்றும் இறைச்சிக்கூடம் அமைத்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் எண்ணற்ற பணிகளைச் செயல்படுத்தி, மக்கள் ஏற்றம் பெற, பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பல திட்டங்களைச் செயல்படுத்தி, இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வகையில் தமிழ்நாட்டில் நம்பர் 1 திராவிட மாடல் ஆட்சி செய்து வரும்தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், இளைஞர்கள் வாழ்வில் ஏற்றம் பெற சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வரும் துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்! நன்றி. வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு ஏ.ஜெ.மணிக்கண்ணன் பேசினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அறந்தாங்கி அம்பிகாபதி

**ஏப்ரல் 26 (2008)**



புதுக்கோட்டை மாவட்ட துணைச் செயலாளராகவும் – மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

பூவளூர் ஊராட்சி மன்றத் தலைவராக பொறுப்பேற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

நெருக்கடி கால 'மிசா' சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர். கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**